# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணித் தேர்வு, வருடம் - IV, 2018

# சட்டவியல்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை:07

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

01) 'சட்டக் கோட்பாடு ஒன்றானது - மக்களினுடைய சமூக அடையாளங்களானவை காலப் போக்கில் எவ்விதம் வடிவமைக்கப்படுகின்றன மற்றும் மாற்றப்படுகின்றன; சமத்துவ மின்மையான சூழ்நிலைகளில், சமூகக் குழுக்களானவை கூட்டு முகவர்கள் என்ற அடிப்படையில் எவ்விதம் உருவாக்கப்படுகின்றன மற்றும் உருவகற்றப்படுகின்றன; சமூகத்திலுள்ள ஆதிக்கக் குழுக்களின் கலாச்சார மேலாதிக்கம் எவ்விதம் கேள்விக்குட் படுத்தப்படுகின்றது; என்பவற்றை விளக்கிக் காட்டவல்லதாக இருக்க வேண்டும் என்பது டன் தளைநீக்க சமூக மாற்றம் மற்றும் அரசியற் செயற்பாடு என்பவற்றுக்கான சாத்தியப்பாடுகள் பற்றித் தெளிவுறுத்துவதாகவும் இருக்க வேண்டும்.'

சட்டத்தின் எக்கோட்பாடானது, உமது கருத்தில், ஓரளவுக்கு இத்தகைய தகுதிகளைக் கொண்டதாக உள்ளது? விளக்கியுரைக்க.

02) "கடினமான" வழக்குகளை நீதிபதிகள் எவ்விதம் தீர்க்கின்றனர்? உமக்குப் பரிச்சயமான கோட்பாடொன்றின் கட்டமைவுப் பின்னணியில், உமது தெரிவிலான ஏதேனுமொரு நாட்டுச் சட்ட அதிகாரத்திலிருந்து உகந்த உதாரணங்களைப் பாவித்து, மேற்படிப் பிரச்சனைக்கு நுணுக்கமாகப் பதிலளிக்க.

03) 'கட்டளைக் கோட்பாட்டின்' பலவீனத்தை அம்பலப்படுத்துவதன் மூலம் சட்டம் பற்றிய எமது விளக்கவுணர்வினை H. L. A. Hart இனால் எந்தளவுக்கு ஆழமாக்க முடிந்திருக்கின்றது என்பதனை மதிப்பீடு செய்க.

04) குறிப்பிட்டதொரு நாட்டின் சட்ட முறைமையொன்றின் பயன்வலுத் தன்மையினைத் தீர்மானிப்பதில் Hans Kelsen இனின் சட்டக் கோட்பாடானது எவ்விதம் உதவுகின்றது என்பதை நுணுக்கமாக ஆய்ந்துரைக்க. உதாரணங்கள் தருக.

05) அறியாமை என்ற முகத்திரை ஒன்றின் பின்னால் தொடக்க நிலையில் வைக்கப் பட்டிருக்கும் சுதந்திரமானதும் அறிவார்த்தமிக்கதுமான நபர்களினால் உடன்பட்டுக் கொள்ளப்படும் அத்தகையவையே சரியான நீதிக் கோட்பாடுகள் ஆகுமென்று John Rawls வாதிடுகின்றார். ஆயினும், Robert Nozick அதி குறைந்தளவிலான அரசு (minimal state) மற்றும் உரித்துடைமைக் கோட்பாடு (entitlement theory) பற்றிப் பேசுகின்றார். இவ்விரு நீதிக் கோட்பாடுகளதும் குறை நிறைகள் குறித்து இலங்கை போன்ற நாடொன்றுக்கான அவற்றின் பொருத்தப்பாட்டின் பின்னணியில் ஆராய்க.

06) **அ அல்லது ஆ** வுக்கு <u>மட்டும்</u> விடை தருக:

அ) உரிமைகள் பற்றிய தாராளவாதிகளின் உரையாடலின் அரசியல் மற்றும் தத்துவார்த்த வங்குறோத்துத் தன்மையினை நுணுக்கச் சட்டக் கற்கைகள் இயக்கமானது (CLS) கண்டிக்கின்றது. மானிட இயல்பின் சிக்கல்களையும் மற்றும் வரலாற்று ரீதியிலான அதிகார இடைவெளிகளினால் மானிடத்தின் மீது உருவாக்கப்பட்டதான அச்சுறுத்தல்களைத் தடுப்பதில் தற்காலச் சட்டங்களின் போதாமையினையும் இவ்வியக்கம் விளக்கியுரைக்கின்றது.

விளக்குக.

ஆ) பெண்ணியவாதச் சட்டக் கோட்பாட்டின் பொதுவான நோக்கிலக்குகளையும் அதன், ஆகக் குறைந்தது, மூன்று உபகோட்பாடுகளையும், அவை ஒவ்வொன்றி னதும் சிறப்பியல்புகளை, பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் உமது தெரிவி லான ஏதேனுமொரு நாட்டுச் சட்ட அதிகாரத்தின் அரசியலமைப்பு /நியதிச் சட்ட ஏற்பாடுகளிலிருந்து உதாரணங்கள் தந்து விளக்கியுரைப்பதன் மூலம் ஆய்ந்துரைக்க.

07) **அ அல்லது ஆ** வுக்கு <u>மட்டும்</u> விடை தருக:

(அ) மனித உரிமைகள் பற்றிய தற்கால எண்ணக் கருக்களைச் சட்டம் பற்றிய சமூகவியற் கருத்தேற்பானது எந்தளவுக்கு உள்வாங்குகின்றது என்பதை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

(ஆ) 'பின்நவீனத்துவத்தை, பின்-கட்டமைப்புவாதமென (post-structuralism), அதாவது – கட்டமைக்கப்பட்டதாகவும் தர்க்க ரீதியானதாகவும் உள்ளார்ந்த விதத்தில் நேரொற்றுமையானதாகவும் சமூகத்தையும் சட்டத்தையும் பற்றிச் சட்டக் கோட்பாடு ஒன்றில் விதந்து காட்டப்படும் சித்திரத்தை நிராகரிப்பதாகக் கொள்ளுதலே, சில வழிகளில், சிறந்த கருத்தாகும்.'

உதாரணங்களுடன் நுணுக்கமாகக் கருத்துரைக்க.

******

**UNIVERSITY OF COLOMBO, SRI LANKA**

**FACULTY OF LAW**

**BACHELOR OF LAWS EXAMINATION, YEAR IV – 2018**

# JURISPRUDENCE

(Three Hours)

Total Number of Questions: **07**

Answer any **FOUR** (04) questions and **no more.**

(Candidates will be penalised for illegible handwriting.)

---

01. 'A theory of law should be able to demonstrate 'how people's social identities are fashioned and altered over time;...how, under conditions of inequality, social groups in the sense of collective agents are formed and unformed; how the cultural hegemony of dominant groups in society contested; ...and shed light on the prospects for emancipatory social change and political practice...'

    Which theory of law, in your opinion, closely has these qualities? Illustrate.

02. How do judges decide "hard" cases? Critically respond to the issue, in the context of a theory you are familiar with, using appropriate examples from any jurisdiction of your choice.

03. Assess the extent to which H. L. A. Hart has been able to further our understanding of law by exposing the weaknesses of the command theory.

04. Critically examine how Hans Kelsen's theory of law helps determine efficacy of a legal system of a particular country. Give examples.

05. John Rawls argues that the correct principles of justice are those that would be agreed to by free and rational persons placed in the original position behind a veil of ignorance. However, Robert Nozick speaks about minimal state idea and entitlement theory. Discuss the pros and cons of these two theories of justice in light of their suitability for a country like Sri Lanka.

06. Answer either (A) **<u>OR</u>** (B):

(A) The Critical Legal Studies movement condemns the political and philosophical bancrupcy of the liberal dialogue on rights. It also elaborates the complexities of human nature and the inadequacy of modern laws to prevent threats on mankind created by historical power gaps. Explain.

(B) Analyse the common objectives of the feminist legal theory and the salient features of at least three of its sub-theories, elaborating with examples drawn from relevant case law and constitutional/ statutory provisions from any jurisdiction of your choice.

07. Answer either (A) **<u>OR</u>** (B):

(A) Critically evaluate the extent to which a sociological conception of law can accommodate modern notions of human rights.

(B) 'In some ways it is better to view postmodernism as post-structuralism – a rejection of the structured, logical and internally consistent picture of society and law exemplified in a legal theory.'

Critically comment with examples.

******